[2010 மே 10

இணைப்பு—II

(711 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 23—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

அறிவிப்புகள், 2010—2011

அறிவிப்பு 1

புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைத்தல்

வருவாய்த் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. கு. சின்னதுரை ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று, திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி, சேலம் மாவட்டத்தில் கெங்கவல்லி ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும்.

இவை தவிர, ஈரோடு மாவட்டத்தில் ஆசனூர், சென்னை தியாகராயநகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இராயக்கோட்டை ஆகிய இடங்களிலும் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும்.

அறிவிப்பு 2

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

தமிழ்நாட்டில், தற்போது மொத்தமுள்ள 292 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் ஒரு மீட்புப் பணி நிலையம் ஆகியவற்றுள், 171 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 30 நிலையங்கள் பகுதி நிரந்தரக் கட்டடங்களிலும், 92 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இ.ஏ.பி. சிவாஜி, திரு. எஸ். லட்சுமணன், திரு. கு. பிச்சாண்டி, திரு. க. சுந்தர், திரு. எம். பன்னீர்செல்வம் ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று,

2010 மே 10]

திருவள்ளூர் மாவட்டத்தில் பள்ளிப்பட்டு, பேரம்பாக்கம், தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ்பெண்ணாத்தூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி ஆகிய இடங்களில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கும், இவை தவிர, தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலக்குண்டு, வேலூர் மாவட்டத்தில் சோளிங்கர், திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் (தெற்கு) ஆகிய இடங்களிலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கும், 2010-2011 ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அறிவிப்பு 3

பழைய தீயணைப்பு வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வாங்குதல்

தீயணைப்பு மீட்புப் பணிகள் துறையிலுள்ள, 15 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவரும் பழைய நீர்தாங்கி வண்டிகள், தண்ணீர் லாரிகள் மற்றும் அவசரகால ஊர்திகள் ஆகியவற்றிற்குப் பதிலாக, நடப்பாண்டில் (2010-2011) புதியதாக 61 நீர்தாங்கி வண்டிகள், 9 தண்ணீர் லாரிகள் மற்றும் ஓர் அவசர கால மீட்பு ஊர்தி ஆகியவை வாங்கப்படும்.

அறிவிப்பு 4

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் அவசர கால மீட்புப் பணி நிலையம் தொடங்குதல்

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் வடகிழக்குப் பருவமழை காலத்தில் நிலச்சரிவு ஏற்படுவதனால், இந்தப் பகுதியில் ஒரு புதிய மீட்புப் பணி நிலையம் தொடங்கப்படும்.

அறிவிப்பு 5

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குக் கூடுதல் ஊர்திகள் வழங்குதல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களுக்கு, அந்தப் பகுதிகளில் ஏற்படும் அதிக தீ விபத்துகளின் காரணமாக, தலா ஒரு தண்ணீர் லாரி கூடுதலாக வழங்கப்படும்.

[2010 மே 10

அறிவிப்பு 6

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்

சென்னை எழும்பூரிலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

அறிவிப்பு 7

புதிய கோட்டம் உருவாக்குதல்

அம்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் சென்னைப் புறநகர் கோட்டம் ஒன்று புதியதாக உருவாக்கப்படும்.

அறிவிப்பு 8

சேமநல நிதிக்கான அரசு மானியத் தொகையினை உயர்த்தி வழங்குதல்

தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர் நலனுக்காக உள்ள சேமநல நிதிக்கு, அரசு மானியமாக ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வழங்கப்படுகிறது. இந்த மானியம், நடப்பாண்டிலிருந்து ரூ.12 இலட்சமாக உயர்த்தப்படும்.

அறிவிப்பு 9

ஓமந்தூரார் தோட்டத்தில் உள்ள குடியிருப்புகளுக்குப் பதிலாக மாற்றுக் குடியிருப்புகள் கட்டுதல்

புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றக் கட்டட விரிவாக்கப் பணிகளுக்காக ஓமந்தூரார் தோட்டத்தில் அமைந்துள்ள 18 தீயணைப்புத் துறைப் பணியாளர் குடியிருப்புகளுக்குப் பதிலாக மாற்றுக் குடியிருப்புகள் கட்டப்படும்.

2010 மே 10]

அறிவிப்பு 10

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாற்றும் நிலைய அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு செங்கம், செய்யார், ஜவ்வாதுமலை, கீழ்பெண்ணாத்தூர், திருக்கழுக்குன்றம், பண்ருட்டி, உளுந்தூர்பேட்டை, நெல்லிக்குப்பம், விருதுநகர், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், நிலக்கோட்டை, அருப்புக்கோட்டை, தேவக்கோட்டை, கடையநல்லூர், நாங்குநேரி, கோவில்பட்டி ஆகிய 17 இடங்களில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக, 225 குடியிருப்புகள் கட்டப்படும்.

அறிவிப்பு 11

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கான தையல் கட்டணம் உயர்த்துதல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, சீருடைக்கான தையல் கட்டணம் ரூ. 200 ஆக வழங்கப்பட்டு வருகிறது. காவல் துறையில் உள்ளதுபோல், இத்துறைப் பணியாளர்களுக்கும் இந்தக் கட்டணம் 1-6-2010 முதல் ரூ. 250 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS